டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 11.02.2026 புதன்கிழமை | பக்கங்கள் 29 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 192 - Madurai | Online Edition

# பயிர்க்கழிவுகள் எரிக்கப்படுவதைக் கண்டறிதல் வலுப்படுத்தப்படும்!

புது தில்லி, பிப்.10

பஞ்சாப், ஹரியானா, உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் தில்லி தேசிய தலைநகரப் பகுதியில் உள்ள நெல் பயிர்க் கழிவுகளை எரிப்பதால் ஏற்படும் காற்று மாசுபாட்டைக் கட்டுப் படுத்த, கண்காணிப்பதற்கான பல அடுக்கு வழிமுறைகளை அரசு பின்பற்றுகிறது.

செயற்கைக்கோள் தரவைப் பயன்படுத்தி, பயிர்க்கழிவுகள் எரியும் நிகழ்வுகளை மதிப்பிடுவதற்கான ஒரு நிலையான நெறிமுறை, மாநில தொலைதூர உணர்திறன் மையங்கள் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்துடன் கலந்தாலோசித்து இஸ்ரோவால் உருவாக்கப்பட்டு, ஆகஸ்ட் 2021 இல் வெளியிடப்பட்டது.

செயற்கைக்கோள் தரவுகளைப் பயன்படுத்தி பயிர்க்கழிவுகள் எரிக்கப்படுவது பிராந்திய அளவில் வெற்றிகரமாகக் கண்காணிக்கப்படுகிறது. பயிர்க்கழிவுகள் எரிக்கப்படும் சம்பவங்களைக் கண்டறிவதை மேலும் வலுப்படுத்துவதற்காக, மாலை நேரங்களில் அமலாக்க முகமைகளின் ரோந்து நடவடிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த முயற்சிகள் காரணமாக, பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்கள் 2022ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 2025ஆம் ஆண்டில் நெல் அறுவடைக் காலத்தில் தீ விபத்துகள் சுமார் 90% குறைந்துள்ளன.

இந்தத் தகவலை, மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவ-நிலை மாற்றத்துறை இணையமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்தார்.

# அயோத்தியாபட்டிணத்தில் வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கான ஆலோசனை குழு கூட்டம்



சேலம், பிப்.10

சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டிணம் வட்டாரத்தில் அட்மா திட்டத்தின் கீழ் வட்டார தொழில்நுட்ப குழு கூட்டம் மற்றும் வட்டார விவசாயிகள் ஆலோசனை குழு கூட்டம் அட்மா ஒன்றிய குழு தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு அட்மா குழு தலைவர் விஜயகுமார் தலைமை வகித்து அனைத்து பயிற்சிகள், செயல் விளக்கங்கள் மற்றும் மானிய திட்டங்களை பயன்படுத்த கேட்டுக் கொண்டார். வேளாண்மை உதவி இயக்குனர் ப.சண்முகப்பிரியா முன்னிலை வகித்து மத்திய மற்றும் மாநில அரசுகளின் திட்ட மானிய விபரங்களை எடுத்துரைத்தார். உதவி தொழில்நுட்ப மேலாளர் தமிழ்ச்செல்வி விவசாயிகளை வரவேற்று அட்மா திட்டம் குறித்து எடுத்துரைத்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் செல்வி 2025 – 2026 ஆம் ஆண்டின் இரண்டாம் கட்ட நிதி ஒதுக்கீட்டினை விவசாயிகளை தெரிவித்து, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஏற்காடு தோட்டக்கலை இணைப்பேராசிரியர் சண்முகசுந்தரம், மா மரத்தில் பழ ஈ கட்டுப்பாடு குறித்து விளக்கம் அளித்தார். வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் சுரேஷ் குமார், கால்நடை உதவி மருத்துவர் கீர்த்தனா, மீன் ஆய்வாளர் மனுநீதிச் சோழன், பட்டு உதவி ஆய்வாளர் சந்தோஷ்குமார், இளநிலை பட்டு உதவி ஆய்வாளர் கலைமதி, உதவி தோட்டக் கலை அலுவலர் மதியழகன், உதவி வேளாண்மை அலுவலர் கவி பாரதி, வேளாண் வணிகம் மற்றும் விற்பனை துறை, மற்றும் எஸ். சந்திரசேகர், வேளாண்மை அலுவலர் வனத்துறை ஆகியோர் கலந்து கொண்டு தங்கள் துறையில் உள்ள மானிய திட்டங்கள் குறித்து எடுத்துக் கூறினர். முடிவில் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை வழங்கி நன்றி உரை கூறப்பட்டது. இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர்களான செல்வி மற்றும் தமிழ்ச்செல்வி ஆகியோர் செய்திருந்தனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# எண்ணெய் வித்து பயிர்களில் மேம்படுத்தப்பட்ட விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் பயிற்சி



கடலூர், பிப்.10

கடலூர் மாவட்டம், விருத்தாசலம், வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பாக எண்ணெய் வித்து பயிர்களில் மேம் படுத்தப்பட்ட விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி 09.02.26 அன்று சின்னகுமட்டி (பரங்கிப்பேட்டை வட்டாரம்) கிராமத்தில் நடைப் பெற்றது. இப்பயிற்சியின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க.நடராஜன், எண்ணெய் வித்து பயிர்களில் சாகுபடி தொழில் நுட்பங்கள், புதிய இரங்கள், விதை நேர்த்தி, உயிர் உரங்கள், நோய் எதிர் உயிர் கொல்லி விதை நேர்த்தி, களை நிர்வாகம், ஜிப்சம் மற்றும் மண் அனைத்தல் பயன்பாடு, வேம்பு பொருட்கள் கொண்டு பூச்சி நோய் பாதுகாப்பு, த.வே.ப.க. பயிர் ஊக்கி நிலக்கடலை ரிச் மற்றும் த.வே.ப.க இணையத்தளம் பயன்பாடு பற்றி விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

பரங்கிப்பேட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர், நந்தினி, மத்திய, மாநில திட்டங்களை பற்றி விவசாயிகளுக்கு விளக்கினார். இப்பயிற்சியில் சின்னகுமட்டி கிராமம், பரங்கிப் பேட்டை வட்டாரத்தை சேர்ந்த40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# சூரிய காந்தி சுய உதவி குழுவின் புதிய தொழில் துவங்க ஆலோசனை கூட்டம்



கன்னியாகுமரி, பிப்.10

கன்னியாகுமரி ரப்பர் உற்பத்தியாளர் சங்க நிறுவனத்தின் பங்களிப்புடன் துவங்கப்பட்ட சூரிய காந்தி சுய உதவிக்குழு கூட்டம் 09.02.26 அன்று மாலை 3 மணி அளவில் குலசேகரத்தில் உள்ள ரப்பர் உற்பத்தியாளர் நிறுவனத்தில் வைத்து நடைபெற்றது.

கன்னியாகுமரி ரப்பர் உற்பத்தியாளர் நிறுவன தலைமை செயல் அதிகாரி மு.பிரியங்கா வரவேற்புரை வழங்கினார். பின்னர் தலைமை உரையாற்றிய பேச்சிப்பாறை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய இணைப் பேராசிரியர் முனைவர் தி.ராஜ் பிரவின் தனது உரையில் சுய உதவிக்குழுவின் சார்பில் புதியதாக தொழில் துவங்கவும், அதற்கான அரசின் நிதி உதவிகள், மானியங்கள் பற்றி விளக்கி கூறினார்.

பின்னர் நடந்த கலந்துரையாடல் நிகழ்வில் சூரிய காந்தி சுய உதவிக்குழுவின் சார்பில் தற்போது ரப்பர் வாரியம் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட காளாண் கூடத்தில் வைத்து புதியதாக காளாண் வளர்ப்பது பற்றிய ஆலோசனை செய்யப் பட்டது.

பேச்சிப்பாறை தோட்டக் கலை ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் காளாண் விதைகள் (ஆரளாசழழஅ ளியறஜ) சுய உதவிக்குழுவிற்கு வழங்கப்பட்டது. இதனை முனைவர் தி.ராஜ் பிரவின் வழங்க இரட்சிணிய சேனை சமூக மற்றும் மேம்பாடு நிறுவன திட்ட பணியாளர் தோ.சா.பேனிதா பெற்றுக் கொண்டார். மேலும் சூரிய காந்தி சுய உதவிக் குழுவின் சார்பில் முதலாம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு காளாண் பண்ணை துவக்க விழாவை நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

இந்த ஆலோசனை கூட்டத்திற்கான ஏற்பாடுகளை சூரிய காந்தி சுய உதவிக் குழுவின் ஜெ.கலா மற்றும் ஜெ.வெல்ஸி ஆகியோர் செய்தனர்.

**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.





இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

நன்றி

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

# பருத்தியில் பயிற்சி பட்டறை

கோயம்புத்தூர், பிப்.10

கோவை, வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலையம் இணைந்து நடத்தும் பருத்திக்கான பயிற்சி பட்டறை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் உள்ள விரிவாக்க கல்வி இயக்கத்தில் நடைபெற்றது. இதில் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் தொழில்நுட்ப வல்லுநர் சுரேஷ் குமார் அனைவரையும் வரவேற்று நிகழ்ச்சியை தொடங்கினார். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் விரிவாக்க கல்வி இயக்குனர் முனைவர் பிபி முருகன், பருத்தி சாகுபடி கோவை மாவட்டத்தில் பரவலாக பயிரிடப்படுகிறது மற்றும் காட்டு விலங்குகளால் ஏற்படுத்தும் சேதங்களுக்கு பருத்தி ஒரு முக்கிய மாற்றுப் பயிராக இருக்கிறது என்று கூறினார்.




அடுத்தபடியாக முதன்மை விஞ்ஞானி மற்றும் தலைவர் ஆனந்தராஜா, அடர் நடவு பருத்தியை பற்றியும் அடர் நடவு முறை குப்புச்சிபாளையம், தொட்டிபாளையம் ஆகிய கிராமங்களில் கள ஆய்வு செய்யப்பட்டதை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். மற்றும் மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலையத்திலிருந்து வந்திருந்த முனைவர் சங்கரநாராயணன், மிக நீண்ட இலை பருத்தியின் முக்கியத்துவத்தை பற்றியும் அதனை சந்தைப்படுத்துதல் பற்றியும் கூறினார். வேளாண்மை அறிவியல் நிலையத்தின் தலைவர் மற்றும் பொறுப்பு, கோமதி பருத்தி சாகுபடி செய்ய அனைத்து விவசாயிகள் முன் வர வேண்டும் என்றும் பருத்தியின் முக்கியத்துவத்தை பற்றி எடுத்துரைத்தார்.

மத்திய வேளாண் பொறியியல் நிறுவனத்தில் இருந்து வந்திருந்த முதன்மை விஞ்ஞானி செந்தில்குமார், பருத்தியில் நடவு முதல் அறுவடை வரை பயன்படுத்தக்கூடிய இயந்திரங்களின் முக்கியத்துவத்தை பற்றி விவசாயிகளுக்கு விரிவாக கூறினார். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பருத்தித் துறையில் இருந்து வந்திருந்த முனைவர் ராஜேஸ்வரி,

பருத்தியில் விதை நேர்த்தி பற்றியும், பருத்தியில் தாக்கக்கூடிய முக்கிய நோய்கள் பற்றியும் அதனை கட்டுப்படுத்தும் முறைகள் பற்றியும் விளக்கமாக விவசாயிகளுக்கு கூறினார். இறுதியாக வேளாண் அறிவியல் நிலையத்தின் இளம் வல்லுநர் சிந்துஜா நன்றியுரை தெரிவித்தார். இந்த பயிற்சி பட்டறை காண அனைத்து ஏற்பாடுகளையும் வேளாண் அறிவியல் நிலையத்தின் இளம் வல்லுனர் துரைசாமி, அனைத்து ஏற்பாடுகளை செய்திருந்தார். இந்த பயிற்சிக்கு 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு தங்கள் சந்தேகங்களையும் கேட்டு பயன்பெற்றனர்.



# உயிர்ம உற்பத்திக்கான தேசிய திட்டத்தின் செயல்முறைகள் மற்றும் தரநிலைகள் குறித்த பயிற்சி

திருநெல்வேலி, பிப்.10

திருநெல்வேலி விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறையின் சார்பாக ஒருங்கிணைந்த விதை வளாகம், திருநெல்வேலியில் வைத்து நேற்று திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, தென்காசி ஆகிய நான்கு மாவட்டங்களைச் சார்ந்த உயிர்மச்சான்று பெற புதிதாக பதிவு செய்த 15 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.



திருநெல்வேலி விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் ஐ.கலைச்செல்வி, வரவேற்புரை யாற்றினார். திருநெல்வேலி வேளாண்மை இணை இயக்குனர் யு.பூவண்ணன், பயிற்சியினை தலைமை தாங்கி துவக்கி வைத்து உயிர்மச் சான்றின் முக்கியத்துவம் மற்றும் இயற்கை விவசாயத்தின் நன்மைகள் பற்றி தலைமை உரையாற்றினார்.

திருநெல்வேலி வேளாண் வணிகத்துறை, ஆனந்த் குமார், வேளாண்மை அலுவலர், தரக்கட்டுப்பாடு அலுவலகம், உயிர்ம பொருட்களை எளிமையாக விற்பனை செய்வதற்கான முறைகளை எடுத்துரைத்தார். திருநெல்வேலி விதை ஆய்வு துணை இயக்குனர் எ.சுஜாதா பாய், உயிர்மச்சான்று பெற்ற விவசாயிகள் விதை விற்பனை என்பது உரிமம் பெறுதல் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து விளக்கம் அளித்தார்.


பயிர் சுழற்சியின் முக்கியத்துவத்தையும் இது மண் வளம், ஊட்டச்சத்துக்கள் மற்றும் களைகளைக் கட்டுப்படுத்தி மகசூலை அதிரிக்கிறது என சிறப்புரையாற்றினார். பெ.மலர்விழி, விதைச் சான்று அலுவலர் (தொ.நு), இடுபொருட்கள் விநியோகிக்கும் உயிரியல் காரணங்கள் மற்றும் உயிர் உரங்கள் (Biofertilizers)

என்பவை மண்ணின் வளம் மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவும் நன்மை செய்யும் நுண்ணுயிரிகளாகும் (பாக்டீரியா, பூஞ்சை). இவை ரசாயன உரங்களுக்கு மாற்றாகப் பயன்படுத்தப்பட்டு, நைட்ரஜன் நிலைநிறுத்தம், பாஸ்பரஸ் கரைப்பு மற்றும் பயிர் வளர்ச்சி ஊக்கிகள் மூலம் மகசூலை அதிகரிக்கின்றன. இவை சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தாத, மலிவான மற்றும் நிலையான விவசாய முறைக்கு உகந்தவை. உயிர் உரங்களான சூடோமோனாஸ், பாஸ்போ பாக்டீரியா கொண்டு நுண்ணுயிர்களால் மண் இயற்கை ஊட்டச்சத்து பெற்று கரிம பொருட்களை அதிகப்படுத்துவதாகவும் அதனை பயன்படுத்தும் முறைகள் பற்றி சிறப்புரையாற்றினார்.

பயிற்சிகள் மானிய திட்டங்கள் இடுபொருட்கள் விநியோகிக்கும் உயிர் உரங்களான சூடோமோனாஸ், பாஸ்போ பாக்டீரியா கொண்டு நுண்ணுயிர்களால் மண் இயற்கை ஊட்டச்சத்து பெற்று கரிம பொருட்களை அதிகப்படுத்துவதாகவும் அதனை பயன்படுத்தும் முறைகள் பற்றி சிறப்புரையாற்றினார்.

உயிர்ம உற்பத்திக்கான தேசிய திட்டத்தின் செயல்முறைகள் மற்றும் தரநிலைகள் குறித்து பயிற்சி அளித்ததுடன் ஷப்ரின், உயிர்மச்சான்று ஆய்வாளர், பதிவேடுகள் பராமரித்தல், உயிர்ம பண்ணையில் பயன்படுத்தக்கூடிய மற்றும் பயன்படுத்தக் கூடாத உரங்கள் உரங்களைப் பற்றியும் உயிர்வேலி அமைத்தல் பற்றியும் பயிற்சி அளித்தார். முன்னதாக விதைச் சான்று மற்றும் உயிர்மச்சான்று துறையின் வழங்கப்பட்ட விளைப் பொருட்கள் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது. விவசாயிகள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர். ஒவ்வொரு விவசாயிகளும் தங்களின் அனுபவங்களை கலந்துரையாடினர்.

திருநெல்வேலி விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் ஐ.கலைச்செல்வி மற்றும் உயிர்மச்சான்று ஆய்வாளர் ஷப்ரின் ஆகியோர் பயிற்சியினை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.



# மீன் அமிலம் தயாரிக்கும் முறையை அறிந்த வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், பிப்.10

பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரி, நாமக்கல் மாவட்டம். கபிலர்மலை ஒன்றியத்தில் கிராமப்புற விவசாய அனுபவ பணித் திட்டம் (RAWE) மாணவிகள் கபிலர்மலை வட்டாரத்திலுள்ள சிறு நெல்லிக்கோவில் கிராமத்தில் இயற்கை விவசாயி சதாசிவத்தின் பண்ணையை பார்வையிட்டனர்.

அவர் மொத்தம் 8 ஏக்கர் நிலம் கொண்டவராகவும், அதில் 4 ஏக்கரில் இயற்கை விவசாயம் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

பார்வையின் போது, 20 லிட்டர் மீன் அமிலம் (Fish Amino Acid) தயாரிக்கும் முறையை மாணவிகள் அறிந்து கொண்டனர்.

இதற்காக 8 கிலோ மீன், 9 கிலோ நாட்டு சர்க்கரை, ஒரு வாழைப்பழக் குலை, 1 கிலோ பேரீச்சம்பழம், 4 முட்டைகள் மற்றும் முருங்கை இலைகள் பயன்படுத்தப்படுகின்றன. அனைத்து பொருட் களையும் காற்று புகாத பாத்திரத்தில் அடைத்து, 40 நாட்கள் இடையூறு இல்லாமல் புளிக்க வைக்கப்படுகிறது. வயலில் பயன் படுத்தும் போது, 16 லிட்டர் தெளிப்பான் ஒன்றுக்கு ¼ லிட்டர் மீன் அமிழம் அளவாக பயன்படுத்தப்படுகிறது.

மேலும், ஆதத்தோடை, எருக்கு, நொச்சி, தும்பை மற்றும் துளசி போன்ற செடிகளைப் பயன்படுத்தி இயற்கை பூச்சி விரட்டும் கரைசல் தயாரிக்கும் முறையும் விளக்கப்பட்டது. இச்செடிகள் மாட்டுச் சிறுநீரில் 8 நாட்கள் ஊறவைக்கப்பட்டு, பின்னர் வடிகட்டி பயிர்களில் தெளிக்கப்படுகின்றன. இதன் மூலம் பூச்சித் தாக்குதல் கட்டுப்படுத்தப்படுகிறது.

அத்துடன், மண்ணின் நுண்ணுயிர் செயல்பாட்டை அதிகரித்து பயிர்களின் வளர்ச்சியை மேம்படுத்தும் ஜீவாமிர்தம் தயாரிப்பு முறையும் அதன் முக்கியத்துவமும் விவசாயி விளக்கினார். இந்தப் பார்வை, உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி குறைந்த செலவில் தயாரிக்கப்படும் சுற்றுச்சூழல் நட்பு இயற்கை உள்ளீடுகள் குறித்த பயனுள்ள நடைமுறை அறிவை மாணவிகளுக்கு வழங்கியது.

**Rithvik Pipe**

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்—தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# வேளாண்மையில் மானியம் முதல் புகார் வரை அனைத்துக்கும் ஓரே செயலி - உழவன் செயலி (UZHAVAN APP)




கடந்த 2018ஆம் ஆண்டில் 25 ஏப்ரலில் தமிழக அரசால் தொடங்கப்பட்டு, விவசாயிகளுக்கு பல்வேறு தகவல்களுக்கான மொபைல் செயலி தான் உழவன் செயலி. இதை பற்றி விரிவாக பார்ப்போம்.

**உழவன் செயலி நமது செயலி? எப்படி?**

இந்த செயலியின் வாயிலாக விவசாயிகளின் நலனுக்கு தேவையான 24 வகை சேவைகளை வழங்கி வருகிறது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தக்கூடிய அரசின் வேளாண்மைத்துறை, தோட்டக் கலைத்துறை, வேளாண் வணிகம், வேளாண் பொறியியல் துறை, விதை சான்றளிப்பு மற்றும் அங்கக சான்றளிப்பு துறை, நீர்வடிப் பகுதித்திட்டம், வேளாண் பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் மூலம் என்னென்ன திட்டங்கள் செயல் படுத்தப்படுகிறது என்பதனை அறிந்து கொள்ளலாம்.

**வேறென்ன தகவல் அறிய முடியும் இந்த செயலியால்?**

மானிய திட்டங்கள் மூலம் வழங்கப்படும் இடுபொருட்களை விவசாயிகள் பெறுவதறகு உழவன் செயலி மூலமாக தேவை யான விவரங்களையும் ஆவணங்களையும் பதிவேற்றம் செய்து விண்ணப்பிக்க வசதியும் உண்டு. உழவன் செயலியின் மூலமாக மண்வளம், இடுபொருள் முன்பதிவு,

பயிர் காப்பீடு, உரங்கள் இருப்பு நிலை விதை இருப்பு வேளாண் இயந்திரங்கள் வாடகை விவரம், சந்தை விலை,

வானிலை நிலவரம், உழவர் அலுவலர் தொடர்பு திட்டம், பயிர் சாகுபடி வழிகாட்டி, இயற்கை விவசாய விளைப்பொருட்கள் விபரம், அணை நீர்மட்டம், பூச்சி / நோய் கண்காணிப்பு பரிந்துரை, அட்மா பயிற்சி மற்றும் செயல் விளக்கம் உள்ளிட்ட விபரங்களை தெரிந்து கொள்ளலாம். இந்த சேவைகள் அந்தந்த மாவட்டங்களில் உள்ள வட்டாரங்கள் வருவாய் கிராமம் வாரியாக தெரிந்து கொள்ளலாம்.

**எப்படி இந்த செயலியை பதிவிறக்கம் செய்யலாம்?**

அவரவர் ஆண்ட்ராய்டு மொபைல் போன்களில் உள்ள கூகுல் பிளே ஸ்டோர் (GOOGLE PLAY STORE) வாயிலாக பதிவிறக்கம் (டவுண் லோட்) செய்யலாம்.

**இதனால் விவசாயிகளுக்கு என்ன பயன்?**

1) தங்களுக்கு தேவையான விபரங்களை நினைத்த இடத்தில், நினைத்த நேரத்தில் உழவன் செயலி வாயிலாக அறியலாம்.

2) தேவையற்ற விரயங்கள் (பணம், நேரம்) தவிர்க்கப்படும்.

ஓவ்வொரு உழவனிடத்தில் இருக்க வேண்டிய ஓரே செயலி இந்த செயலி தான். என்ன பதிவிறக்கம் செய்து விட்டாச்சா, உடனே செய்யுங்கள்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# உயிர்ம வேளாண்மை கண்காட்சி மற்றும் கருத்தரங்கு விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறை அழைப்பு

புதுக்கோட்டை, பிப்.10

தமிழ்நாடு அரசு, உணவு தானிய உற்பத்தியினை அதிகரித்திட பல்வேறு திட்டங்களை வேளாண்மைத்துறை மூலம் செயல் படுத்தி வருகிறது.

உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு மட்டுமின்றி உணவு மூலம் நோய், நொடியற்ற ஒரு ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கவும், சுற்றுச்சூழலையும், மண் வளத்தையும் பாதுகாத்து, வருங்கால தலைமுறையினருக்கு வழங்கும் நோக்கத்தோடு, புதுக்கோட்டை மாவட்ட வேளாண் மைத் துறையின் அட்மா திட்டத்தின் கீழ், உயிர்ம வேளாண்மை விழிப்புணர்வு கண்காட்சி மற்றும் கருத்தரங்கம், 13.02.26 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 10.30 மணியளவில் திருவப்பூர் PVR மஹாலில் நடைபெற உள்ளது.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்ச்சியில் இயற்கை வளங்கள் மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி மேயர், மாநகராட்சி துணை மேயர் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

உயிர்ம வேளாண் கண்காட்சியில் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, வேளாண்மை பொறியியல்துறை, விதைச்சான்று மற்றும் உயிர்ம சான்றளிப்புத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், இயற்கை வேளாண்மை விவசாய குழுக்கள், இயற்கை வேளாண் இடுபொருள் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் மற்றும் இயற்கை வேளாண் மதிப்புக்கூட்டு பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் சார்பில் சிறப்பான முறையில் கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட உள்ளன.

மேலும் இந்நிகழ்ச்சியில் குடுமியான்மலை, ஸ்டாமின் இயக்குநர் முனைவர் ப.சங்கரலிங்கம், குடுமியான்மலை, வேளாண்மைக்

கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர் சு.செல்வம் மற்றும் வம்பன் வேளாண்மை அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் எம்.தமிழ்செல்வன், வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் கலந்து கொண்டு, உயிர்ம வேளாண்மை குறித்து சிறப்புரை யாற்ற உள்ளார்கள். இக்கண்காட்சி மற்றும் கருத்தரங்கில் புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு பயன்பெறுமாறு புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி கேட்டுக் கொண்டுள்ளார்.



# நெல் தரிசில் பருத்தி பயிர் சாகுபடி

இராமநாதபுரம், பிப்.10

இராமநாதபுரம் மாவட்டத்தில் பருத்தி பயிரானது, நெல் அறுவடை முடித்த பிறகு வயலில் உள்ள ஈரப்பதைக் கொண்டு எந்த விதமான நிலத் தயாரிப்பும் இல்லாமல், அறுவடை செய்யப்பட்ட நெல் தாள்களுக்கிடையே விதைப்பு செய்யப்படுகிறது. மேலும், நெல் சாகுபடிக்குப் பிறகு பருத்தி பயிரானது பிப்ரவரி, மார்ச் (தை, மாசி) மாதங்களில் இறவைப் பயிராக சாகுபடி செய்யப்படுகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதி, கடலாடி, முதுகுளத்தூர் தாலுக்காகளில் ஒரு சில பகுதிகளிலும் நெல் தரிசில் கோடை பயிராக பருத்தி பயிர் செய்யப்படுகிறது. பருத்தி சாகுபடியில் அதிக விளைச்சல் பெற்று விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த பருத்தி சாகுபடி நுணுக்கங்களை அறிந்து பயிர் சாகுபடி செய்யவேண்டும்.

பருத்தி சாகுபடியின் விளைச்சலை பல்வேறு காரணிகள் நிர்ணயிக்கும் போது, நல்ல உயர் விளைச்சல் ரகங்கள் அல்லது பீடி (BT) பருத்தி வீரிய ஒட்டு ரகங்களை தேர்வு செய்து, தேர்ந்தெடுக்கப்பட்ட ரகத்தின் விதை தரத்தையும் மற்றும் குணாதிசியங்களையும் அறிந்து, உரிய உழவியல் தொழில்நுட்பங்களை பின்பற்றினால் அதிக விளைச்சல் பெற முடியும்.

நெல் தரிசில் பருத்தி சாகுபடி செய்வதற்கு 130 முதல் 135 நாட்கள் வயதுள்ள குறுகிய கால ரகங்களான எம்சியு 7, எம்சியு 12, எஸ்விபிஆர் 2, எஸ்விபிஆர் 3 மிகவும் ஏற்றவை. மேலும், வீரிய ஒட்டு பீடி (BT) பருத்தி ரகங்களான ராசி, ஜாது, மல்லிகா, ஜாக்பாட், சூப்பர் காட், ரோபோ, ஆக்ஷபிரதீக், துளசி, அஜோபா, அங்கூர், காவேரி போன்றவைகளும் ஏற்றவை.

**ரகங்களின் தரம்**

பருத்தி சாகுபடியில் இடுபொருட்களின் செலவில் விதை முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே, விவசாயிகள் நல்ல தரமான விதைகளையே பயன் படுத்த வேண்டும். மேலும், வீரிய ஒட்டுரக பீடி (BT) பருத்திகள் பெரும்பாலும் உண்மை நிலை விதைகளாகவே உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இதனால் விவசாயிகள் இந்த வகை விதைகளின் முளைப்புத் திறன் மற்றும் பிற விதை காரணிகளின் குணாதிசியங்களை விதைப்பரிசோதனை மூலம் தெரிந்து விதைப்பு மேற்கொள்வதால்

வயலில் போதிய பயிர் எண்ணிக்கையை பராமரித்து, வளமான செடிகள் வளர்ச்சி மூலம் உயர் விளைச்சல் பெறலாம். அதிகபட்ச இனத்தூய்மையும், புறத்தூய்மையும், குறைந்தபட்ச ஈரப்பதமும், பூச்சி நோய் தாக்காமலும் நல்ல முளைப்புத்திறனுடன் கூடிய வேகமான வளர்ச்சியை தரக்கூடிய விதைகளே தரமான விதைகள் ஆகும். பருத்தி பயிரை பொருத்தவரை பயன் படுத்தப்படும் விதைகளுக்கு 75 சதவீதம் முளைப்புத்திறனும், 98 சதவீதம் புறத்தூய்மையும் கட்டாயம் இருக்க வேண்டும். மேலும், விதைகளில் 2 சதவீதம் மட்டுமே கல், மண், தூசிகள் உடைந்த விதைகள் இருக்கலாம். களை விதைகளை பொறுத்த வரை ஒரு கிலோ விதைகளுக்கு 10 மட்டுமே இருக்கலாம். மேலும், பிற இனப்பயிர்களை பொறுத்தவரை அதிகபட்சமாக ஒரு கிலோவுக்கு 10 மட்டுமே இருக்க வேண்டும்.

## செடிகளின் எண்ணிக்கை

பருத்தி சாகுபடியில் உயர் மகசூல் பெறுவதற்கு நாட்டு ரகப் பருத்தி பயிர் என்றால் ஒரு ஏக்கருக்கு 17 ஆயிரம் முதல் 18 ஆயிரம் வரை வளமான பருத்தி செடிகளும், வீரிய ஒட்டு ரகம் என்றால், 6 ஆயிரம் செடிகளும், தனியார் வீரிய ஒட்டு ரக பீடி (யவீ) பருத்தி என்றால், ஒரு ஏக்கருக்கு 4 ஆயிரம் முதல் 5 ஆயிரம் செடிகள் என்ற வகையில் பயிர் எணிக்கையை பராமரிக்க வேண்டும். இதற்கு ரக பருத்திக்கு பஞ்சு நீக்கப்பட்ட விதை என்றால் ஒரு ஏக்கருக்கு 3 கிலோவும், விரிய ஒட்டு விதை என்றால், ஒரு கிலோவும் தேவைப்படும். பீடி (BT) பருத்தி என்றால் ஒரு துளையில் 2 விதைகள் வீதம் விதைப்பதற்கு ஒரு ஏக்கருக்கு 900 கிராம் விதைகளும், ஒரு துளையில் ஒரு விதை வீதம் விதைப்பதற்கு 450 கிராம் விதைகளும் போதுமான தாகும்.

## விதைப்பு முறை

நெல் அறுவடை முடிந்தவுடன் ஈரப்பதம் காய்வதற்கு முன்பாக விதைகள் 75க்கு 30 செ.மீ. இடைவெளியில் குச்சி மூலம் 3 செ.மீ. ஆழத்தில் துளையிட்டு அதனுள் 2 விதைகள் விதைக்க வேண்டும். பீடி (யவீ) பருத்தி என்றால் 120க்கு 90 செ.மீ இடைவெளியில் விதைகள் 3 செ.மீ. ஆழத்தில் விதைக்க வேண்டும். மற்றொரு முறையிலும் நெல் தரிசுப் பருத்தியை விதைக்கலாம். அதாவது நெல் அறுவடைக்குப் பிறகு நிலம் நன்கு காய்ந்த பிறகு உழுது பாத்தி எடுத்தும் விதைக்கலாம்.

ஒரு சதுர மீட்டருக்கு 5 செடிகள் இருக்குமாறு விதைத்த 10 முதல் 15 நாட்களுக்குள் இடைவெளியை நிரப்பி குத்துக்கு ஒரு செடி இருக்குமாறு கலைத்து பயிர் எண்ணிக்கை பராமரிக்க வேண்டும்.

எனவே, விதைகளின் புறத்தூய்மை, ஈரப்பதம், முளைப்புத் திறன் மற்றும் பிற ரக விதைக்கலப்பு ஆகியவற்றை மிக துல்லியமாக அறிந்து கொள்ள அந்தந்த மாவட்ட விதைப் பரிசோதனை நிலையத்தை அணுகி பயன் பெறலாம். இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள விதை உற்பத்தியாளர்கள், விதை விநியோகம் செய்பவர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விவசாயிகள், விதை பரிசோதனை மேற்கொள்ள ரக பருத்திக்கு 150 கிராம் மற்றும் பீடி (BT) விரிய ஒட்டு ரகப் பருத்திக்கு 100 கிராம் விதை மாதிரியுடனும் மற்றும் ஒரு மாதிரிக்கு ரூ.80/- கட்டணமாக செலுத்தி பரமக்குடி ஒழுங்குமுறை விற்பனைகூட வளாகத்தில் உள்ள விதைப் பரிசோதனை நிலையத்தில் விதைப்பரிசோதனை செய்து விதைக்குமாறு விதைப்பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி மற்றும் வேளாண்மை அலுவலர்கள் முருகேஸ்வரி மற்றும் வீரபாண்டியன் கேட்டுக் கொண்டனர்.

## இயற்கை பூச்சி விரட்டி மற்றும் இயற்கை முறையில் பயிர்களுக்கு பேரூட்டச்சத்து அழித்தல் முறையை அறிந்த வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், பிப்.10

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் அடுத்த வேட்டாம்பாடியில் உள்ள பிஜிபி வேளாண்மை கல்லூரி மாணவிகள் முத்துவேல் தோட்டம் அரியாகவுண்டம்பட்டி கிராமத்தில் உள்ள இயற்கை விவசாயி பெ.சரவணனின் தோட்டத்திற்கு சென்று அங்கு இருக்கும் ஒருங்கிணைந்த பண்ணையம், கால்நடை வளர்ப்பு, நாட்டுக் கோழி வளர்ப்பு, பரன்மேல் ஆடு வளர்ப்பு, வெங்காயம் மற்றும் நிலக்கடலை உற்பத்தி, தேனீ வளர்ப்பு, உயிர்வாயு உற்பத்தி போன்றவற்றின் செய்முறைகள் மற்றும் பயன்பாடுகள் பற்றி விரிவாக மாணவிகள் கேட்டு அறிந்து கொண்டனர். மேலும் இயற்கை விவசாயி பெ.சரவணன், இயற்கை பூச்சி விரட்டி தயாரித்தல், இயற்கை முறையில் எவ்வாறு பயிர்களுக்கு பேரூட்டச் சத்துக்கள் (தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து) நுண்ணூட்டச் சத்துக்கள் அழித்தல் என்பதை விளக்கினார்.



Rithvik Pipe
25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன்
கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்
பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்
25 ஆண்டுகள் உத்தரவாதம்
நம்பிக்கைக்கு அடையாளம்
100% LEAD-FREE பைப்புகள்
ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
ISI சான்று பெற்ற பைப்புகள்
தரத்திற்க்கு ஒரே அடையாளம்
ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
67 GRADE மூலப்பொருட்கள்
அதிக வலிமை, நீண்ட ஆயுள்
TEST CERTIFICATE – QR CODE மூலமாக
ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
FREE ON-SITE TESTING
விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
சரியான எடை, தடிமன்
ஏமாற்றமில்லா தயாரிப்பு
PRODUCT RANGES
ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)
ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)
ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)
ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)
ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm
PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK
RITHVIK PIPES PROUDLY TRUSTED BY
LMW
isha
POWERGRID
BHEL
Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com
Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com
For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# விதைப்பரிசோதனை செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு!

கரூர், பிப்.10

விவசாயத்தில் முக்கிய பங்கு வகிக்கும் இடுபொருள் விதை. தரமான விதைகளை விதைப்பதன் மூலமே அதிக மகசூல் பெற முடியும். தரமான விதை என்பது விதைச்சான்று துறையினரால் பல கட்டங்களில் வயல் மட்ட ஆய்வு மற்றும் விதைப் பரிசோதனை செய்யப்பட்ட சான்று விதைகளே ஆகும். விதைப் பரிசோதனை நிலையத்தில் புறத்தூய்மை, ஈரப்பதம், முளைப்புத் திறன், பிறரக கலப்பு என்று 4 விதமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

புறத்தூய்மை என்பது விதையின் சுத்தத்தை குறிப்பதாகும். அதில் களை விதைகள், பிற பயிர் விதைகள், உயிர்ப்பற்ற பொருள் ஆகியவை பரிசோதிக்கப்படுகிறது. ஈரப்பதம் என்பது பயிர் வாரியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதில் நிர்ணயிக்கப் பட்ட அளவைவிட அதிகமாக இருந்தால் அதிக பூச்சி தாக்குதல் மற்றும் நுண்ணுயிர் தாக்குதலுக்கு உட்பட்டு தரம் குறைய வாய்ப்புள்ளது.

முளைப்புத்திறன் பரிசோதனையில் விதை மாதிரிகளின் முளைப்புத்திறன் பரிசோதிக்கப்படுகின்றன. ஒவ்வொரு விதைக்கும் குறிப்பிட்ட முளைப்புத்திறன் நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. முளைப்புத்திறன் குறைந்தால் பயிர் எண்ணிக்கை குறைந்து மகசூல் பாதிக்கும். விதைச்சட்டம் 1966 பிரிவு 7(பி) யின் படி ஒவ்வொரு பயிருக்கும் குறைந்தபட்ச முளைப்புத்திறன் தரம் நிர்ணயம் செய்து அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி நெல்லுக்கு 80 சதவிகிதமும், வீரிய மக்காச்சோளத்திற்கு 90 சதவிகிதமும், கம்பு, சோளம், கேழ்வரகு, சாமை, குதிரைவாலி, உளுந்து, துவரை, பாசிப்பயறு ஆகிய பயிர்களுக்கு 75 சதவிகிதமும், நிலக்கடலைக்கு 70 சதவிகிதமும், எள்ளிற்கு 80 சதவிகிதமும், காய்கறிப் பயிர்களான கத்திரி, தக்காளி, வெங்காயம், கொத்தவரை, கீரை வகைகளுக்கு 70 சதவிகி தமும், மிளகாய், பூசணி, பரங்கி, புடல், பாகல், பீர்க்கன், தர்பூசணிக்கு 60 சதவிகிதமும் வெண்டை, கொத்தமல்லிக்கு 65 சதவிகிதமும் முளைப்புத்திறன் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பிறரக கலப்பு என்பது ஒரே பயிரில் பல்வேறு ரக விதைகள் கலந்திருப்பது ஆகும். குறிப்பிட்ட அளவுக்கு மேல் பிறரக கலப்பு இருந்தால் விதைகள் விற்பனைக்கு பரிந்துரைக்கப் படுவதில்லை. இதன் மூலம் வேளாண்மை துறையினரால் விதைப்பண்ணை அமைக்கப்பட்டு உற்பத்தி செய்யப்படும்

விதைகளுக்கும், தனியார் உற்பத்தியாளர்களின் விதை களுக்கும் விதைப்பரிசோதனை அடிப்படையிலேயே சான்று அளிக்கப்படுகிறது. இதன் மூலம் தரமான விதைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்ய பரிசோதனை முடிவுகள் பயன் படுகின்றன.

விவசாயிகள், விதை விற்பனையாளர்கள் மற்றும் உற்பத்தி யாளர்கள் தங்களிடம் இருப்பில் உள்ள விதைகளின் தரத்தை அறிய பகுப்பாய்வு முடிவுகள் பயன்படுகின்றன. விதைப் பரிசோதனை ஆய்வுக்கட்டணமாக பணி விதை மாதிரி ஒன்றுக்கு ரூ.80 மட்டும் வசூலிக்கப்படுகிறது. ஆய்வு செய்யக்கூடிய விதையினை கட்டணத்துடன் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ மூத்த வேளாண்மை அலுவலர், விதைப் பரிசோதனை நிலையம், முதல் குறுக்குத் தெரு, திண்ணப்பா நகர், காந்தி கிராமம், கரூர் 4 என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

பணி விதை மாதிரிகள் விதைப்பரிசோதனை நிலையத்திற்கு பகுப்பாய்விற்கு அனுப்பும் போது விதை மாதிரியின் அளவு நெல் விதை 50 கிராம், உளுந்து, பாசிப்பயறு 100 கிராம், மக்காச்சோளம், நிலக்கடலை 500 கிராம், எள், ராகி 25 கிராம் காய்கறிப் பயிர்களான கத்திரி, தக்காளி, மிளகாய் -10 கிராம், சுரை, பரங்கி, வெள்ளரி-100 கிராம், பாகல், புடல்-250 கிராம், ஆகிய அளவில் விதை மாதிரி எடுத்து தங்களது முழு முகவரியுடன் கூடிய கடிதத்துடன் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி விதையின் முளைப்புத்திறன் அறிந்து தரமான விதைகளை பயன்படுத்தி அதிகமகசூல் பெற வேண்டுமாறு கரூர் விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் க.ரமேஷ்குமார் தெரிவித்துள்ளார்.



# உழவர் சங்கமம் 2026 - நடைபெற்றது




வேலூர், பிப்.10

வேலூர் உழவர் சங்கமம் 2026, வி.ஐ.டி வேளாண் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் வி.ஐ.டி கல்லூரியின் அதிபர் டாக்டர் ஜி.விஸ்வநாதன், இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம், திருச்சி இயக்குநர் டாக்டர் ஆர்.செல்வராஜன், கோரமண்டல் நிறுவனத்தின் துணைத்தலைவர் மற்றும் வணிகத் தலைவர் கே.பி.ஸ்ரீனிவாசன் மற்றும் இப்கோ தமிழ்நாடு மாநில விற்பனை மேலாளர் என்.சுரேஷ் ஆகியோர் தலைமை விருந்தினர்களாக கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக இஃப்கோ நிறுவனத்தின் காட்சி அரங்கம் அமைக்கப்பட்டு, நானோ யூரியா, நானோ டிஏபி மற்றும் சாகரிகா போன்ற திரவ உரங்களின் நன்மைகள் மற்றும் பயன்படுத்தும் முறை குறித்தும் இப்கோ கிசான் ட்ரோன் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. இதில் வேலூர், திருவண்ணாமலை மற்றும் தமிழ்நாட்டின் பிற மாவட் டங்களைச் சேர்ந்த 5000க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்று பயன் பெற்றனர்.

# மக்காச்சோளம் விதைப்பு பணி மேற்கொள்ள வேண்டாம்

## விதை ஆய்வு துணை இயக்குநர் அறிவுறுத்தல்

சேலம், பிப்.10

சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் தற்சமயம் கோடைப் பருவத்திற்கான பயிர் சாகுபடிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விவசாயிகள் தங்களிடம் உள்ள நீர் ஆதாரத்திற்கேற்ப நெல், மக்காச்சோளம், கம்பு, உளுந்து மற்றும் எள் போன்ற கோடைப் பருவப் பயிர்களை தேர்வு செய்து விதைப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதில் மக்காச்சோளம் பயிரிட உள்ள விவசாயிகள் பிப்ரவரி – 2026 இரண்டாம் வாரம் முதல் ஏப்ரல் மாதம் வரை மக்காச்சோளம்

விதைப்பு பணி மேற்கொள்ள வேண்டாம் என கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

அவ்வாறு விதைப்பு செய்யும் பொழுது பூப்பிடிக்கும் பருவமானது அதிக வெப்பநிலையினை எதிர்க்கொள்ளும் நிலை ஏற்படும் இச்சமயத்தில் ஆண் பூவிலுள்ள மகரந்தம் கருகி மகரந்தச் சேர்க்கை பாதிக்கப்படும். இதனால் கதிர்களில் மணிகள்இல்லாத நிலை அல்லது குறைந்த மணிகள் காணப்படும் நிலை ஏற்பட்டு மகசூல் இழப்பு ஏற்படும்.

எனவே, விவசாயிகள் மக்காச்சோள விதைப்பினை மாசி, பங்குனி மாதங்களில் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.



# விவசாயிகளுடன் நேரடியாக கலந்துரையாடிய வேளாண் கல்லூரி மாணவர்கள்



நாமக்கல், பிப்.10

நாமக்கல் மாவட்டம், பிஜிபி வேளாண் கல்லூரியின் இறுதியாண்டு மாணவர்கள், தங்களின் களப்பயிற்சியின் ஒரு பகுதியாக எலச்சிப்பாளையம் வட்டாரத்தில் உள்ள அகரம் கிராம விவசாயிகளை நேரில் சந்தித்து, விரிவான கலந்துரையாடல் மேற் கொண்டனர்.

இக்கலந்துரையாடலில், ஒவ்வொரு மாணவரும் அகரம் கிராமத்தைச் சேர்ந்த எட்டு முதல் பத்து விவசாயிகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களுடைய வயல் நிலத்தின் தன்மை, பயிர் வகைகள், சாகுபடி முறைகள், நீர்ப்பாசன வசதிகள், உரம் மற்றும் பூச்சிக்கொல்லி பயன்பாடு, சந்தை தொடர்பான சவால்கள் உள்ளிட்ட பல்வேறு விவரங்களை கேட்டறிந்தனர்.

அதே நேரத்தில், கல்லூரியில் பயின்ற நவீன வேளாண் தொழில்நுட்பங்கள், நிலத்திற்கேற்ற பயிர் தேர்வு, இயற்கை மற்றும் சமநிலை உரமிடல் முறைகள், நோய் மற்றும் பூச்சி மேலாண்மை போன்ற விவசாயிகளின் சந்தேகங்களுக்கு மாணவர்கள் தெளிவான விளக்கங்களும் நடைமுறை ஆலோசனைகளும் வழங்கினர்.

இதனிடையே, விவசாயிகள் தங்களின் பல ஆண்டுகால அனுபவங்கள், நிலத்தில் எதிர்கொள்ளும் நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் பாரம்பரிய விவசாய அறிவுகளை மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டனர். இந்த அனுபவப் பகிர்வு, மாணவர்களுக்கு பாடநூல் அறிவைத் தாண்டிய நடைமுறை புரிதலை வழங்கியது.


இவ்வகை களப்பயிற்சி நடவடிக்கைகள், மாணவர்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையே அறிவுப் பரிமாற்றத்தை வலுப்படுத்துவதோடு, எதிர்காலத்தில் வேளாண் துறையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும் வகையில் பயனுள்ளதாக அமைந்தது.

# ஊரகப் பங்கேற்பு மதிப்பீடு நடத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், பிப்.10

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம் துத்திக்குளம் கிராமத்தில் பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவிகள் தங்களது இறுதியாண்டு பாடத்திட்டமான கிராமத்தில் தங்கி வேளாண் பயிற்சி பெறும் திட்டத்தின் ஒரு பகுதியாக ஊரக பங்கேற்பு மதிப்பீடு (Participatory Rural Appraisal) நடத்தினர். இந்த பயிற்சியில் கிராம மக்கள், விவசாயிகள், பெண்கள் மற்றும் இளைஞர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். சமூக வரைபடம், வள வரைபடம், பயிர் கால அட்டவணை, பிரச்சனை மரம் ஆகியவை உருவாக்கப்பட்டு கிராமத்தில் உள்ள முக்கியமான சமூக பொருளாதார மற்றும் விவசாய பிரச்சனைகள், அவற்றின் காரணங்கள், விளைவுகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இதன் மூலம் கிராமத்தின் சமூக அமைப்பு மற்றும் வளவாய்ப்புகளை மாணவிகள் தெளிவாக புரிந்து கொண்டதுடன் மக்கள் பார்வையில் இருந்து விவசாய மற்றும் வாழ்வாதாரர்களின் பிரச்சனைகளை அணுகுவது எவ்வளவு முக்கியம் என்பதையும் கற்று உணர்ந்தனர். இந்த ஊணயூபு செயல்பாடுகள் மூலம் சமூக பங்கேற்பு ஒருங்கிணைப்பு பிரச்சனைகளை அடையாளம் காணும் திறன் மற்றும் நிலைத்திருக்கும் தீர்வுகளை திட்டமிடும் நடைமுறை பற்றிய அனுபவத்தை மாணவர்கள் நேரடியாக பெற்றனர் இந்த செயல்முறை அவர்களின் களத்திரனை மேம்படுத்தியதோடு கிராம வளர்ச்சி திட்டங்கள் எப்படி உருவாக்கப்பட வேண்டும் என்பதையும் முழுமையாக அறிந்து கொள்ள உதவியது மற்றும் கிராம மக்களின் நேரடி பங்கேற்புடன் பிரச்சனைகள் அடையாளம் காணப்பட்டு எதிர்கால வளர்ச்சி திட்டங்கள் திட்டமிட உதவியதாக இருந்தது கிராமத்தின் நிலைத்த வளர்ச்சிக்கு இந்த பயிற்சி முக்கியமானதாக அமைந்தது.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# காண்டாமிருக வண்டு கட்டுப்பாட்டுக்கு செயல் விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், பிப்.10

நாமக்கல் வட்டாரம், ராசம்பாளையம் கிராமத்தில், தென்னை மரங்களில் பெரும் சேதத்தை ஏற்படுத்தும் காண்டாமிருக வண்டு தாக்கத்தை கட்டுப்படுத்த இயற்கை மேலாண்மை முறையை குறித்து பிஜிபி வேளாண் கல்லூரியைச் சேர்ந்த மாணவிகள் நேரடி களச் செயல்விளக்கம் நடத்தினர்.

இந்த செயல்விளக்கத்தில், ஆமணக்கு புண்ணாக்கு அடிப்படை யிலான இயற்கை வண்டு ஈர்ப்பு மற்றும் கட்டுப்பாட்டு முறை விவசாயிகளுக்கு விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது. இதில் 1 கிலோ ஆமணக்கு புண்ணாக்கை 5 லிட்டர் தண்ணீரில் கலந்து, அந்த கலவையை மண்பானையில் நிரப்பி, தென்னை மரத்தின் அடிப்பகுதியில் புதைத்து (பானையின் வாய்பகுதி திறந்த நிலையில்) வைக்க வேண்டும் என கூறப்பட்டது. இம்முறையை 2-3 மாதங் களுக்கு ஒரு முறை மேற்கொள்ளலாம் என அறிவுறுத்தப்பட்டது.

இந்த முறையால் குறைந்த செலவில் எளிதாக தயாரிக்கக்கூடிய, இரசாயன மீதமில்லாத தீர்வு கிடைப்பதுடன், காண்டாமிருக வண்டு தாக்கம் திறம்பட கட்டுப்படுத்தப்படுவதாக மாணவிகள் தெரிவித் தனர். இந்த செயல்விளக்கம் விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றதுடன், நிலைத்த வேளாண்மை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை ஊக்குவிக்கும் ஒரு பயனுள்ள கள முயற்சியாக அமைந்தது.

# மாம்பழ மரங்களில் பூச்சித் தாக்குதலை கட்டுப்படுத்த புதிய முறை

நாமக்கல், பிப்.10

நாங்கள் இன்று விவசாயியை சந்தித்து, மாம்பழ மரங்களில் பட்டை சுற்றும் முறையை காண்பித்தோம். மரத்தை 30-40 அடி உயரம் வரை பிளாஸ்டிக் பையால் மூடி, பூச்சிகளை ஈர்க்க கிரீஸ் தடவ வேண்டும். மண்ணில், அது கூட்டுப்புழு மற்றும் முட்டைகளை இடுவதால், இது அவற்றை கட்டுப்படுத்த உதவும். வழுவழுப்பு குறைந்தால், வேப்ப எண்ணெய் மற்றும் கிரீஸ் தடவ வேண்டும்.

இந்த முறை மூலம், மாம்பழ மரங்களில் உள்ள மீலி பக் பூச்சி மற்றும் இலையில் உள்ள கரும் பூஞ்சை நோயை கட்டுப்படுத்தலாம். இதனால் விளைச்சல் குறைவை தடுக்கலாம். இது குறைந்த செலவில் பூச்சி மேலாண்மை முறையாகும்.

## மலசமுத்திரம் அருகே பயிர் வெட்டு பரிசோதனையில் பங்கேற்ற வேளாண் கல்லூரி மாணவர்கள்



நாமக்கல், பிப்.10

நாமக்கல் மாவட்டம், மலசமுத்திரம் வட்டாரத்திற்குட்பட்ட நாகர்பாளையம் கிராமத்தில், பயிர் உற்பத்தி மதிப்பீட்டிற்காக நடத்தப்பட்ட பயிர் வெட்டு பரிசோதனை (Crop Cutting Experiment) நிகழ்வில் பிஜிபி வேளாண் கல்லூரி மாணவர்கள் சிறப்பாக பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் புள்ளியியல் துறையின் துணை இயக்குநர் பெரியசாமி மற்றும் துணை வேளாண் அலுவலர் ஆகியோர் நேரில் கலந்து கொண்டு, பயிர் வெட்டு பரிசோதனையின் முக்கியத்துவம், நடைமுறை செயல்முறை மற்றும் அரசுத் திட்டங்களில் இதன் பயன்பாடு குறித்து மாணவர்களுக்கு விளக்கினர்.

விவசாய நிலத்தில் நேரடியாக பயிர்களை வெட்டி, மகசூல் கணக்கீடு செய்வது குறித்து மாணவர்களுக்கு நடைமுறை பயிற்சி வழங்கப்பட்டது.

இதன் மூலம் பயிர் உற்பத்தி கணக்கெடுப்பு, தரவு சேகரிப்பு மற்றும் புள்ளியியல் ஆய்வின் அவசியம் குறித்து மாணவர்கள் தெளிவாக அறிந்து கொண்டனர்.

இந்த நிகழ்வு, மாணவர்களின் நடைமுறை அறிவை மேம்படுத்துவதுடன், விவசாயத் துறையின் களப்பணிகளை நேரடியாக அறிந்து கொள்ள உதவியாக அமைந்தது என மாணவர்களும் அதிகாரிகளும் தெரிவித்தனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**